[*1995 ஏப்ரல் 18*

324—

லால்குடி தொகுதி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எக்ஸ்ரே கருவி வழங்குதல்.

35672*—திரு. ஆர். தங்கராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தொகுதி, புதூர் உத்தமனூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எக்ஸ்ரே பெருக்காற்றல் கருவி (X-Ray Developing Device) *வழங்க அரசு முன்வருமா?*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தொகுதி, புதூர் உத்தமனூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எக்ஸ்ரே கதிர் பெருக்காற்றல் கருவி (X-Ray Developing Device) வழங்கப்பட்டுள்ளது.

331—

உப்பிலியாபுரம் தொகுதியில் சத்துணவு மையம் தொடங்கும் திட்டம்.

25965*—திரு. வி. ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலை, கோம்பை, மஜாரா-ஏரிக்காடு, மஜாரா-மருதை ஆகிய இடங்களில் எம்.ஜி.ஆர். சத்துணவு மையம் தொடங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,